7.08.2022. அ.வ.எண்.8/2017 வா.சா.1

சாட்சி ஆஜர், சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார்.

<u>பெயர்.திரு.அமரன்</u>

<u>1-ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி :-</u>

1. கரிவரதராஜபெருமாள் கோவிலானது ஒக்கலிக கவுண்டர் சமுதாயத்திற்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். மேற்படி கோவிலானது வேட்டுவ கவுண்டர் சமுதாயத்திற்கு குல தெய்வ கோவில் அல்ல என்றால் சரியல்ல. வேட்டுவ கவுண்டர் சமுதாய மக்களின் சில பிரிவனிருக்கு குல தெய்வம் ஆகும். எந்த எந்த பிரிவினருக்கு குல தெய்வம் என்றால் தாசர் குலத்தை சேர்ந்த சமுதாயத்தினருக்கு குல தெய்வம் ஆகும். நான் சொல்வதுபோல் மேற்சொன்ன கோவில் வேட்டுவ சமுதாய மக்களுக்கு பாத்தியப்பட்ட கோவில் அல்ல என்றும் ஒக்கலிக சமுதாயத்திற்கு மட்டுமே பாத்தியப்பட்டது என்றும் சொன்னால் சரியல்ல.

2. ஏற்கனவே 2012ல் கட்டி முடிக்கப்பட்டுள்ள கட்டிடத்தின் அளவுகள் என்ன என்றால் 61X32 அடி ஆகும். தற்போது என்ன அளவுக்கு கட்டிடம் கட்டுவதற்கு அனுமதி வாங்கியுள்ளேன் என்றால் நியாபகம் இல்லை. ஏற்கனவே 61X32 அடியில் கட்டப்பட்டுள்ள கட்டித்தை ஒட்டிதான் கட்டிடம் கட்டுவதற்கு அனுமதி வாங்கியுள்ளேனா என்றால் ஆமாம். நான் இந்த வழக்கானது எத்தனை சதுரடியை பொறுத்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் நியாபகம் இல்லை. நான் ஏற்கனவே கட்டியுள்ள கட்டிடத்தை தற்போது சொத்து விவரத்தில் கண்ட சொத்திற்கு செக்குபந்தியாக குறிப்பிடவில்லை என்றால் நியாபகம் இல்லை. தற்போது இந்த மடத்திற்கு பாத்தியப்பட்ட இடம் என்று எத்தனை சதுரடி இடம் இவ்வழக்கின் காலை எண்ணில் உள்ளது என்றால் எனக்கு சரியாக தெரியவில்லை. தாவா சொத்து கரிவரதராஜபெருமாள் கோவிலுக்கு பாத்தியப்பட்டது என்பதால் தான் மேற்படி சொத்து குறித்து விவரங்கள் எனக்கு சரியாக தெரியவில்லை என்றால் சரியல்ல.

3. எந்த செக்குபந்திக்குள் உள்ள சொத்தை பொறுத்து இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஏற்கனவே கட்டியுள்ள கட்டிடத்திற்கும் கிழக்கு தார் ரோட்டிற்கும் மேற்கு, விநாயகர் கோவிலுக்கும் தெற்கு, பழைய பஞ்சாயத்து

போர்டு கட்டித்திற்கும் வடக்கு, என்ற செக்குபந்திகளுக்குட்பட்ட சொத்து பொறுத்து வழக்கு தாக்கல் செய்துள்ளேன். வா.சா.ஆ.1 ஆன 1935-ம் வருடத்திய டிரஸ்ட் ஒப்பந்த பத்திரத்தில் யாரெல்லாம் தரப்பினராக உள்ளனர் என்றால் எனது தாத்தாவான அமராவதி கவுண்டரும் அவரை தவிர 4 நபர்களும் தரப்பினர்களாக உள்ளனர். மேற்படி ஆவணத்தில் மேற்படி 5 நபர்கள்தான் தரப்பினர்களா என்றால் ஆமாம். மேற்படி 5 நபர்களும் வேட்டுவ சமுதாயத்தை சார்ந்தவர்களா அல்லது வேறு சமுதாயத்தை சார்ந்தவர்களா என்றால் வேட்டுவ சமுதாயத்தை சார்ந்தவர்கள் ஆவார்கள். வா.சா.ஆ.1 ஆவணத்தின் அடிப்படையில்தான் நான் இந்த வழக்கை பரம்பரை தர்மகர்த்தா மற்றும் அறங்காவலர் என்ற நிலையில் உரிமை கோருகிறேனா என்றால் ஆமாம்.

4. மேற்சொன்னவாறு உரிமை கோரும் நான் மேற்படி வா.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள நபர்களை இவ்வழக்கில் கட்சி சேர்க்கவில்லை என்றால் சரிதான். ஆனால் அவர்கள் சம்மதம் கொடுத்ததன் அடிப்படையில் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன். யார் யார் எல்லாம் எப்போது சம்மதம் கொடுத்தார்கள் என்றால் வாய்மொழியாக ஒப்பந்தத்தில் கண்ட நபர்களின் வாரிசுகள் சம்மதம் தெரிவித்தார்கள். பெயர் தெரியாது. மேற்படி விவரத்தை நான் வழக்குரையிலோ அல்லது நிருபண உறுதி கூற்றிலோ குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் நியாபகம் இல்லை. 1935-ம் ஆண்டு டிரஸ்ட் ஒப்பந்தமானது 13 நபர்கள் கண்டு எழுதப்பட்டுள்ளது என்றும், மேற்படி ஆவணமானது நான் சொல்வது போல் 5 நபர்கள் கண்டு எழுதப்படவில்லை என்றும் மேலும் மேற்படி ஆவணமானது ஒரு சமுதாய மக்களை மட்டும் குறிப்பிட்டு எழுதப்படவில்லை என்றும் சொன்னால் சாட்சி ஆவணத்தை படித்து பார்த்து மேற்படி ஆவணமானது 13 நபர்கள் கண்டு எழுதப்பட்டுள்ளது என்றும், நாயக்கர்மார் சமுதாயம் குறிப்பிட்டு எழுதப்பட்டுள்ளது என்றும் வெள்ளாளர் சமுதாயம் பற்றி எழுதப்பட்டுளளதா என்று தெரியாது என்றும் சாட்சியம் அளிக்கிறார்.

5. ஆவணத்தில் உள்ள நபர்கள் அனைவரையும் கட்சி சேர்க்காமல் இவ்வழக்கில் பரம்பரை அறங்காவலர் என்று உரிமை கோர இயலாது என்றால் சரியல்ல. புல

எண்.349/2-ஆனது சுமார் 2 ஏக்கர் விஸ்தீர்ணம் இருக்குமா என்றால் ஆமாம். மேற்படி 2 ஏக்கருக்குள் என்ன என்ன சொத்துக்கள் உள்ளது எனறால் கரிவரதராஜ பெருமாள் கோவில், கோவிலுக்குரிய கிணறு, மடம், சமுதாய கூடம் மற்றும் காலி இடம் உள்ளது. நான் எனது தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வா.சா.ஆ.2 ஆன அடங்கல் ஆவணத்தை கொடுத்து பெற்றேன் என்றால் தகவல் உரிமை சட்டத்தில் 1935-ம் தேதிய வா.சா.ஆ.1 ஆன ஆவணத்தை எனது உரிமை ஆவணமாக காட்டிதான் மேற்படி ஆவணம் பெற்றுள்ளேன். பொதுவாக அடங்கல் வாங்குவது என்றால் பொதுவாக அச்சொத்தில் உள்ள பசலி ஆண்டின் என்ன என்ன வகைப்பாடுகள் புலத்தில் உள்ளதோ அதை குறிப்பிட்டு கொடுத்துதான் அடங்கல் வழங்கப்படும் என்றால் சரிதான்.

6. 1425-ம் ஆண்டு பசலி ஆண்டில் இதே கரிவரதராஜ பெருமாள் கோவில், கிணறு, மடம், சமுதாய கூடம், காலி இடம் தாவா புல எண்ணில் இருந்தது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.2 ஆன அடங்கல் ஆவணத்தில் சமுதாய கூடம், கிணறு காண்பிக்கப்படவில்லை என்றால் சரிதான். ஆனால் கோவில் காட்டப்பட்டுள்ளது. பஞ்சாயத்தில போட்டுள்ள வரி ஆவணங்களான வா.சா.ஆ.5 முதல் 8 வரையிலான ஆவணங்கள் எந்த ஆவணத்தின் அடிப்படையில் போடப்பட்டது என்றால் வா.சா.ஆ.1 ஆவணத்தின் அடிப்படையில்தான் போடப்பட்டது. வா.சா.ஆ.6,7,8 ஆகிய ஆவணங்களில் நான் வேட்டுவ சமுதாயத்தினரின் பரம்பரை அறங்காவலர் என்றோ மடத்தின் தர்மகர்த்தா என்றோ ரசீது எதுவும் போடவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.5 ஆவணத்தில் என்னுடைய பெயரை பொறுத்து அசல் வழங்கப்பட்டும் மேற்படி ரசீதில் நிர்வாகி என்றும் மற்றொரு மையினால் புதிதாக எழுதப்பட்டுள்ளது என்றும் சொன்னால் சரிதான்.

7. ஆனால், அது என்னால் எழுதப்படவில்லை. ரசீது வழங்கியவரால் எழுதப்பட்டது. வா.சா.ஆ.9 மற்றும் 10, 16 ஆன மின் கட்டண ரசீதானது வீட்டு வரியை வைத்து பெறப்பட்டதா என்றால் ஆமாம். மேற்படி ஆவணங்களும் என்னுடைய தனிப்பட்ட பெயர்தான் உள்ளது என்றும், மடத்தினுடைய தர்மகர்த்தா

மற்றும் அறங்காவலர் என்றும் குறிப்பிடப்படவில்லை என்றும் சொன்னால் சரிதான். என்னுடைய தகப்பனார் பவானிசாகர் ஒன்றியத்தின் பெருந்தலைவராக இருந்தார் என்றால் சரிதான். அதுபோன்று என்னுடைய நெருங்கிய உறவினர்களில் சில நபர்களும் பவானிசாகர் சட்டமன்றத்தில் உறுப்பினர்களாக இருந்தார்கள் என்றால் சரிதான். நானும் புளியம்பட்டி நகர எல்கைக்குள் செல்வாக்கு மிகுந்த நபர் என்றால் VAO மற்றும் RI தெரியும் அதனடிப்படையில் நான் செல்வாக்கு மிகுந்த நபர் என்று சொல்ல முடியாது. எனது தகப்பனார் பவானி சாகர் ஒன்றியத்தின் பெருந்தலைவராக இருந்தார் என்பதன் அடிப்படையில், அதுபோன்று, என்னுடைய நெருங்கிய உறவினர்களில் சில நபர்களும் பவானிசாகர் சட்டமன்றத்தில் உறுப்பினர்களாக இருந்தார்கள் என்ற வகையிலும், நானும் புளியம்பட்டி நகர எல்கைக்குள் செல்வாக்கு மிகுந்த நபர் என்பதாலும் எனக்கு ஆதரவாக அரசு அதிகாரிகளின் உதவியுடன் எனது தரப்பு ஆவணங்களை பெற்று தாக்கல் செய்துள்ளேன் என்றும் சொன்னால் சரியல்ல.

8. உண்மையில் நான் வேட்டுவ குலசமுதாய மக்களுக்கான பரம்பரை அறங்காவலர் என்றிருந்தால் நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களில் மேற்படி சமுதாய மக்களின் பரம்பரை அறங்காவலர் என்றும் பரம்பரை தர்மகர்த்தா என்றும் எழுதப்பட்டிருக்கும் என்றும் சொன்னால் சரியல்ல. புல எண்.349/2-ல் உள்ள சொத்தானது கரிவரதராஜ பெருமாள் கோவிலுக்கு பாத்தியப்பட்டது என்றும் மேற்படி சொத்தில் எந்த சமுதாய மக்களும் தனிப்பட்ட முறையில் உரிமை கோர இயலாது என்றும் சொன்னால் சரியல்ல. அது அரசு புறம்போக்கு ஆகும். வாதத்திற்காக மேற்படி சொத்தானது அரசு புறம்போக்கு என்று வைத்து கொண்டாலும் மேற்படி சொத்தில் தனி நபர்கள் யாதொரு உரிமையும் கோர இயலாது என்றும் சொன்னால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள இவ்வழக்கானது 1-ம் பிரதிவாதியின் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

(Sd) அமரன்

(Sd)Tmt.P.Sharmila, B.B.A., B.L.,
District Munsif,
Sathyamangalam.